

இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று (9.05.2023) முகாம் அலுவலகத்தில், பன்னிரண்டாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் சாதனை படைத்த திண்டுக்கல், அண்ணாமலையார் மில்ஸ் பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவி செல்வி ச. நந்தினி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். அதுபோது மாணவிக்கு பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் சிலையை வழங்கி வாழ்த்தினார்.

### கர்நாடகாவில் முஸ்லிம்களின் இட ஒதுக்கீடு

# ரத்து முடிவு மீதான தடை மேலும் நீட்டிப்பு!

## உச்சநீதிமன்றம் உத்தரவு!

புதுடெல்லி, மே 10-

கர்நாடகத்தில் முஸ்லிம்களுக்கான இட ஒதுக்கீட்டை ரத்து செய்து கர்நாடக பிறப்பித்துள்ள உத்தரவுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை சுப்ரீம் கோர்ட்டு நீட்டித்து உத்தரவிட்டுள்ளது.

கர்நாடக பா.ஜனதா அரசு, கடந்த 2 மாதங்களுக்கு முன்பு முஸ்லிம்களுக்கான 4 சதவீத இட ஒதுக்கீட்டை ரத்து செய்தது. அந்த 4 சதவீத இட ஒதுக்கீடு லிங்காயத், ஒக்கலிகர் சமூகங்களுக்கு தலா 2 சதவீதம் என்று சரிசமமாக பகிர்ந்து அளிக்கப்பட்டது.

இதற்கு முஸ்லிம் மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். கர்நாடக அரசின் இந்த முடிவை ரத்து செய்ய கோரி சுப்ரீம் கோர்ட்டில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனு மீது நீதிபதிகள் கே.எம்.ஜோசப், பி.வி.நாகரத்னா, அசானுத்தீன் அமானுல்லாஜ் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணை நடைபெற்று வருகிறது. இதற்கிடையே முஸ்லிம்களின் இட ஒதுக்கீட்டை ரத்து செய்து அரசு பிறப்பித்த உத்தரவுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இந்த மனு சுப்ரீம் கோர்ட்டில் நீதிபதிகள் முன்னிலையில் இன்று விசாரணைக்கு வந்தது.

மனுதாரர் சார்பில் ஆஜரான வக்கீல் துஷ்யந்த் தாவே, "கர்நாடகத்தில் உள்துறை மந்திரி, முஸ்லிம்களின் இட ஒதுக்கீட்டை வாபஸ் பெற்றுள்ளதாக தினமும் பேசுகிறார். அவர் இத்தகைய கருத்தை கூறுவது ஏன்?" என்றார். அப்போது கர்நாடக அரசு சார்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா வாதிடுகையில், "உள்துறை மந்திரி அவ்வாறு கூறியது பற்றி எனக்கு தெரியாது. ஆனால் மத அடிப்படையில் இட ஒதுக்கீடு வழங்க அரசியல் சாசனத்தில் இடம் இல்லை என்று யாராவது கூறினால் அதில் என்ன தவறு உள்ளது?. இது தான் உண்மை" என்றார்.

அப்போது நீதிபதி ஜோசப் பேசும்போது, "சொலிசிட்டர் ஜெனரல் இந்த கோர்ட்டில் கருத்து கூறுவதில் பிரச்சினை இல்லை. ஆனால் கோர்ட்டுக்கு வெளியே இதுகுறித்து கருத்து கூறுவது சரியல்ல. 1971ம் ஆண்டு கோர்ட்டு உத்தரவுக்கு எதிராக பேசியதாக ஒரு அரசியல் தலைவர் மீது அவதூறு வழக்கு தொடரப்பட்டது. இந்த கோர்ட்டை அரசியல் நோக்கத்திற்காக பயன்படுத்துவதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம். இந்த விஷயம் குறித்து அரசியல் ரீதியான கருத்துகளை கூறக்கூடாது. கோர்ட்டு புனிதத்தை காக்க வேண்டியது அவசியம். நாங்கள் இந்த மனு மீதான விசாரணையை ஒத்தி வைக்கிறோம்" என்றார்.

அதைத்தொடர்ந்து அடுத்த உத்தரவு பிறப்பிக்கப்படும் வரை முஸ்லிம்களின் இட ஒதுக்கீட்டை ரத்து செய்துள்ள கர்நாடக அரசின் உத்தரவுக்கு விதிக்கப்பட்டுள்ள தடைநீட்டிக்கப்படுவதாக நீதிபதிகள் அறிவித்தனர். இந்த மனு மீதான அடுத்த விசாரணை வருகிற ஜூலை மாதத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டது.

### கரூர் மாவட்டத்தில் உள்ள

# அனைத்து துப்புரவுப் பணியாளர்களுக்கும் வீட்டுமனை!

## அமைச்சர் வி.செந்தில் பாலாஜி பேச்சு!

கரூர், மே 10-

கரூர் மாநகர வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் வெங்கமேடு அண்ணா சிலை அருகே நடைபெற்றது. மாநகர வடக்கு பகுதி செயலாளர் கரூர் கணேசன் தலைமை வகித்தார்.

துணைச் செயலாளர் கே.செந்தில் சரவணன் வரவேற்று பேசினார். மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான வி.செந்தில் பாலாஜி, நாஞ்சில் சம்பத் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

சட்டத்துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், மாநில நிர்வாகிகள் பரணி கே.மணி, கரூர் முரளி, பி.விஜயகுமார், மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், மாநகரச் செயலாளர் எஸ்.பி.கனகராஜ், துணை மேயர் தாரணி சரவணன், மாவட்டக் கழக நிர்வாகிகள் எம்.எஸ்.கே.கருணாநிதி, மகேஸ்வரி சுப்பிரமணி, செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் சுப.ராஜகோபால், காலனி செந்தில், ஆண்டாள் பாலகுருபரன், என்.எஸ்.ஆறுமுகம், வி.கே.டி. ராஜ்கண்ணு, கே.வேலுச்சாமி, எஸ்.காளியப்பன், வடக்கு பகுதிக் கழக நிர்வாகிகள் எம்.பாண்டியன், பரணி சுந்தர்ராஜன், கே.எம்.பெரியசாமி, தமிழ்நாடு செல்வராஜ், வி.பி.என். ரஞ்சித் குமார், எஸ்.சாந்தி, ஆர்.லட்சுமணன், வி.கிரிவாசகன், எஸ்.பிரபாகரன், எஸ். சண்முகம், ஒமேகா சுப்பிரமணி, பி.ராவணன், பகுதிச் செயலாளர்கள் கே. சுப்ரமணியன், கோல்ட் ஸ்பாட் ஆர்.எஸ்.ராஜா, கா.அன்பரசன், இளைஞர் அணி செயலாளர் வெங்கமேடு சக்திவேல், வார்டுக் கழக நிர்வாகிகள் கே.வடிவேல் அரசு, எஸ்.பி.நாகராஜன், டி.நாச்சிமுத்து, பி.தங்கத்துரை, கே.பாலசுப்பிரமணியம், ஏ.ராஜா, எம்.சண்முகம், எஸ்.கார்த்திகேயன், மாமன்ற உறுப்பினர்கள் எஸ். மாரியம்மாள், ஏ.பூங்கோதை, வி.ராஜேஸ்வரி முன்னிலை வகித்தனர்.

வட்டக் கழகச் செயலாளர் பி.சசிகுமார் நன்றியுரை கூறினார்.

கரூர் மத்திய கிழக்கு மாநகரப் பகுதி கழகம் சார்பில் இரண்டு ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் பசுபதிபாளையம் மெயின் ரோடு கலைஞர் திடலில் நடைபெற்றது. பகுதிக் கழகச் செயலாளர் மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் ஆர்.எஸ்.ராஜா தலைமை வகித்தார். வட்டச் செயலாளர் பசுவை சக்திவேல் வரவேற்புரையாற்றினார். மாநில சட்டத்துறை இணைச் செயலாளர் என். மணிராஜ், தொழிலாளர் அணி துணைச் செயலாளர் பி.விஜயகுமார், நகரச் செயலாளர் எஸ்.பி.கனகராஜ், மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி பி.சரவணன், பகுதிச் செயலாளர்கள் கரூர் கணேசன், கே.சுப்பிரமணி, கா.அன்பரசன், மாவட்டக் கழக நிர்வாகிகள் பூவை ரமேஷ் பாபு, மகேஸ்வரி சுப்பிரமணி, பி.வி.பாரத், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் சுப.ராஜகோபால், காலனி எஸ்.செந்தில், ஆண்டாள் ஜி.பாலகுருபரன், எம்.துரைராஜ், சாலை கே.சுப்பிரமணி, என்.செல்வராஜ் வி .கருப்பண்ணன், என். எஸ். ஆறுமுகம், விகேடி .ராஜ்கண்ணு, கே.வேலுச்சாமி, கே. சாமிநாதன், சி.கருப்பையா, பி.பி. சரவணன், இ.ஜபருல்லா, சிவகாமி சண்முகம், எஸ்.காளியப்பன், எம்.சிவசாமி, ஏ.நஞ்சுண்டேஸ்வரன், என்.ராமலிங்கம்,

மத்திய கிழக்கு மாநகர நிர்வாகிகள் டி.நாச்சிமுத்து, என்.பரமசிவம், பி.ஏ. குமார், வள்ளி வேல்முருகன், எம்.பாலசுப்பிரமணியன், எஸ்.ஞானசேகரன், எஸ்.வடிவேல், சந்துரு மோகன்ராஜ், ஆர்.மருதநாயகம், மாநகர நிர்வாகிகள் கேவி தங்கவேல், எம். பாண்டியன், கே.எஸ்.அறிவின்ஸ், எம்.நிஷா, அங்குநா.பசுபதி, கே.எம். பாலகிருஷ்ணன், பி.சுப்பிரமணி, கே.இளமுருகு, ஆர்.வெங்கடேஷ், பி.பழனிவேல், கே.ஆர்.சுந்தரராஜன், விஜி எஸ்.குமார், ஏ.ஆரோக்கிய ஜெயபால், பி.சண்முகம், ஜி.ஜீவானந்தம்,



அணி நிர்வாகிகள் எஸ். சக்திவேல் ஜிம் எம்.சிவா, கலாவதி சக்திவேல், பி.எல். பாலச்சந்திரன், ஜே.பிரின்ஸி, இரா.குடியரசு, பழ.அப்பாசாமி, தென்னிலை பி.பாலு, பி.சங்கர், புலவர் அருணா பொன்னுசாமி, பாக்கிய ரகுபதி, ஆர்.ஜோதிபாசு, பி.மோகனசுப்பு, சி.நவாஸ் கான், ம.அம்பிகாபதி, தம்பி எஸ்.சுதாகர், விஆர்.அண்ணாவேலு, வார்டுச் செயலாளர்கள் கே.பழனிகுமார், பி. இளங்கோவன், ஏ.லாரன்ஸ், டி.மதியழகன், எம்.ஜாகிர் உசேன், எஸ்.கே.சிவகுமார், எஸ். முருகானந்தம், மாமன்ற உறுப்பினர்கள் கே.அருள்மணி, வி.நந்தினி, எஸ். இந்திராணி முன்னிலை வகித்தனர்.

கரூர் மத்திய கிழக்கு மாநகரப் பிரதிநிதி எம்.நாராயணன் நன்றியுரை கூறினார்.

மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான வி. செந்தில் பாலாஜி பேசியதாவது:-

கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து தூய்மை பணியாளர்களுக்கும் வீட்டு மனை பட்டா வழங்க பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கரூர் மாவட்டத்திற்கு என்ன செய்தோமென அ.தி.மு.க.வினர்களால் பட்டியலிட முடியுமா?

410 ரூபாய்க்கு விற்ற சிலிண்டர் இன்று 1200 ரூபாய். பெட்ரோல் டீசல் விலை உயர்ந்து கொண்டே போகிறது அ.தி.மு.க.வினரால்இதை கேட்க முடியுமா? எடப்பாடிக்கு முட்டி போட மட்டும் தான் தெரியும். சட்டமன்றத்தில் ஆளுநர் வரம்பு மீறிய போது நொடிப்பொழுதில் நமது முதல்வர் தளபதி அவர்கள் தீர்மானம் நிறைவேற்றினார்கள்.

ஆனால் எடப்பாடி ஆளுநரை விட வேகமாக அவையைவிட்டு ஓடி விட்டார். இதுதான் அவரது ஆளுமை. அடிமை ஆட்சி நடத்தியவர்கள் இந்த அரசின் சாதனைகளை பொறுக்க முடியாமல் அவதூறுகளை பரப்பிக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறு அமைச்சர் வி. செந்தில் பாலாஜி பேசினார்.

### நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வதற்காக

## காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் பகுதி -ஒன்றிய - நகர - பேரூர் வாரியாக செயல்வீரர்கள் கூட்டங்கள்!



மாவட்ட செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!

**வரும் நாடாளுமன்ற தேர்தலை எதிர் கொள்வதற்காக, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள பகுதி ஒன்றிய நகர வாரியாக செயல் வீரர்கள் கூட்டம். கீழ்க்கண்ட தேதிகளில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்தில் கீழ்காணும் விவரப்படி நடைபெற உள்ளது.**

| நாள் | பகுதி – ஒன்றிய – நகர – பேரூர் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|
| | **20 -5-2023 - சனிக்கிழமை** | |
| காலை 8 மணி<br>காலை 10 மணி<br>மாலை 3 மணி<br>மாலை 5 மணி | பல்லாவரம் வடக்கு பகுதி<br>பல்லாவரம் தெற்கு பகுதி<br>செம்பாக்கம் வடக்கு பகுதி<br>செம்பாக்கம் தெற்கு பகுதி | அருள்முருகன் டவர்ஸ் திருமண மண்டபம்,<br>சுரபி மகால், 200 அடி ரேடியல் சாலை,<br>சுரபி மகால், 200 அடி ரேடியல் சாலை,<br>எம்.ஜெ.எல். வெங்கடேஷ்வரா திருமண மண்டபம், செம்பாக்கம் |
| | **21 -5-2023 - ஞாயிற்றுக்கிழமை** | |
| காலை 8 மணி | தாம்பரம் கிழக்கு பகுதி | வெங்கடேஸ்வரா திருமண மண்டபம், மாடம்பாக்கம் |
| காலை 10 மணி | பெருங்களத்தூர் தெற்கு பகுதி | சேகர் திருமண மண்டபம், பெருங்களத்தூர் |
| மாலை 3 மணி | கண்டோன்மெண்ட் நகரம் | சிவந்தி ஆதித்தன் திருமண மண்டபம், கண்டோன்மெண்ட் |
| | **24 -5-2023 - புதன்கிழமை** | |
| மாலை 3 மணி | செங்கல்பட்டு நகரம் | நகராட்சி திருமண மண்டபம், செங்கல்பட்டு |
| மாலை 5 மணி | மறைமலைநகர் நகரம் | ராணி பேலஸ், மறைமலைநகர் |
| | **26 -5-2023 - வெள்ளிக்கிழமை** | |
| மாலை 3 மணி | காட்டாங்குளத்தூர் தெற்கு ஒன்றியம் | கே.ஆர்.ஜி.திருமண மண்டபம், சிங்கபெருமாள் கோயில் |
| மாலை 5 மணி | நந்திவரம்கூடுவாஞ்சேரி நகரம் | ஏ.சி.எஸ். மகால் வளாகம், கூடுவாஞ்சேரி |
| | **27 -5-2023 - சனிக்கிழமை** | |
| காலை 8 மணி | திருப்போரூர் தெற்கு ஒன்றியம் | காமாட்சி திருமண மண்டபம், மானாம்பதி |
| மாலை 3 மணி | திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியம் | கலைஞர் திடல், சோகண்டி |
| மாலை 5 மணி | திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியம் | முருகன் கோயில் அருகில் திடல், வல்லக்கோட்டை |
| | **28 -5-2023 - ஞாயிற்றுக்கிழமை** | |
| காலை 8 மணி | தாம்பரம் மேற்கு பகுதி | அன்னை பாத்திமா தேவாலய அரங்கம், கிழக்கு தாம்பரம் |
| காலை 10 மணி | பெருங்களத்தூர் வடக்கு பகுதி | - - - - |
| மாலை 3 மணி | குன்றத்தூர் வடக்கு ஒன்றியம் | சக்தி பேலஸ், பரணிபுத்தூர் |
| மாலை 5 மணி | குன்றத்தூர் தெற்கு ஒன்றியம் | தில்லை மகால் திருமண மண்டபம், படப்பை |

இச்செயல் வீரர் கூட்டங்களில் அந்தந்த பகுதி ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள், இச்செயல்வீரர்கள் கூட்டங்களை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்து, இக்கூட்டங்களில் அந்தந்த பகுதி ஒன்றிய நகரங்களில் அடங்கிய நகர பேரூர் வட்டக் கழக நிர்வாகிகள் இளைஞர் அணி மாணவர் அணி மகளிர் அணி நிர்வாகிகள் வாக்குச்சாவடி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் மற்றும் கழக செயல்வீரர்கள் அனைவருக்கும் முறையாக தகவல் தந்து அவர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் பங்கேற்கச் செய்து இச்செயல்வீரர் கூட்டங்களை மிகவும் எழுச்சியான முறையில் நடத்திடும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் **தா.மோ.அன்பரசன்**
செயலாளர் - காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.



சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் தெற்கு பகுதி திமுக சார்பில், திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் 58 வது வட்டம், நேவல் மருத்துவமனை சாலை, பெரிய மேட்டில் நடைபெற்றது. அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தயாநிதி மாறன் எம்.பி., ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்புரையாற்றினர். பகுதிச் செயலாளர் வி. சுதாகர் தலைமை தாங்கினார். இதில் கே.எஸ். ரவிச்சந்திரன், சொ.வேலு எம்.சி., கே.எஸ்.எம்.நாதன், பரிதி இளம் சுருதி எம்.சி., ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி., அ.நிர்மலா தேவி, எல்.சுந்தர்ராஜன் எம்.சி., எஸ். ரசூல், எம்.மலர்மாறன், கே.அன்னபூரணி, எஸ்.ஜெகதீசன், ஆர்.பாபு,(எ)சந்திரசேகரன், டால்பின் எஸ்.ஹரி, இ.மொய்தீன், வான்மதி கதிரவன், மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர். நிறைவாக 58–வது வட்டக் கழகச் செயலாளர் வி.விஜயகுமார் நன்றி உரையாற்றினார்.

